# கொழும்பு மாநகர சபை

## 2021/04ஆம் காலாண்டிற்கான வரிக்கட்டண வரி செலுத்தும் இறுதித் திகதி, 2022/01ஆம் காலாண்டிற்காக 5% கழிவு பெறுதல் மற்றும் 2022 நான்கு காலாண்டுகளுடன் சம்பந்தப்பட்ட முழுமையான வரிக்கட்டண தொகையை ஒரே முறையல் செலுத்தி 10% கழிவு பெற்றுக் கொள்ளல்

**2021/04ஆம் தவணை**

1. 2021/04ஆம் காலாண்டிற்காக செலுத்த வேண்டிய வரிக்கட்டணம் வரி 2021 டிசம்பர் 31ம் திகதி அல்லது அதற்கு முன் இவ் அலுவலகத்திற்கு கிடைத்தல் வேண்டும்.
2. 2021.12.31ம் திகதிக்குப் பின்னர் 2021/04ஆம் காலாண்டிற்காக மேற்கொள்ளும் கொடுப்பனவுகள் சார்பாக குடியிருப்புச் சொத்து மற்றும் தரிசு நிலத்திற்காக காலாண்டின் வரிக்கட்டண வரி பெறுமதியில் 15%உம் ஏனைய சொத்துக்களுக்கு 20% ஆக தண்டக் கட்டணம் அறவிடப்படும்.

**2022 சகல தவணைகள்/2022/01ஆம் தவணை**

3. 2022 ஜனவரி 31 அல்லது அதற்கு முன் 2022 சகல தவணைகளுக்கும் கொடுப்பனவிற்காக ஆண்டின் முழு வரிக்கட்டண வரி பெறுமதியில் 10% கழிவாக வழங்கப்படும்.
4. 2022 ஜனவரி 31 அல்லது அதற்கு முன் 2022/01 காலாண்டு சார்பாக மேற்கொள்ளும் கொடுப்பனவுகளுக்கு காலாண்டின் வரிக்கட்டண வரி பெறுமதியில் 5% கழிவாக வழங்கப்படும்.

**வரிக்கட்டண வரி செலுத்தக் கூடிய முறை**

5. நகர சபை வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள வரிக்கட்டண கரும பீடம் மற்றும் காசாளர் கரும பீடம் வாரத்தில் சகல அலுவலக நாட்களிலும் மற்றும் அரச விடுமுறை தினம் அல்லாத சனிக்கிழமை நாட்களில் மு.ப. 8.30 முதல் பி.ப. 4.00 வரை திறக்கப்படும். காசாளர் கரும பீடத்திற்கு காசு, காசோலை, கடன் அட்டை (Credit Card) மூலம் கொடுப்பனவுகள் மேற்கொள்ளும் வசதிகள் வழங்கப்பட்டுள்ளது.
6. கொழும்பு நகர எல்லைக்குள் அமைந்துள்ள இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கி கிளை (நகர மண்டபக்கிளை தவிர்ந்த) மூலம் வரிக்கட்டண வரி செலுத்த முடியும் அத்துடன் அங்கு நகர சபையினால் வங்கிக்கு வழங்கியுள்ள மாதிரிப் பத்திரங்களை மட்டும் பாவித்து வரிக்கட்டண வரி செலுத்துதல் வேண்டும். குறித்த மாதிரிப் பத்திரங்களை பாவிக்காமலிருத்தல் மற்றும் மாதிரிப் பத்திரத்தில் குறிப்பிட வேண்டிய சகல விடயங்களும் சரியாக பூர்த்தி செய்யாதிருத்தல் போன்ற காரணங்களினால் காசு முறையாக கணக்கில் இடப்படாமை பற்றி நகர சபையினால் பொறுப்புக் கூறப்படமாட்டாது.
7. கொழும்பு மாநகர சபையின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.colombo.mc.gov.lk ஊடாக சேவைக் கட்டணமின்றி ஒன்லைன் (online) முறையில் வரிக்கட்டண வரியை செலுத்தும் வசதி செய்யப்பட்டுள்ளது.
8. கொழும்பு நகர சபைக்கு செந்தமான கீழ்க்காணும் அலுவலகத்தில் உருவாக்கப்பட்டுள்ள வரிக்கட்டண கரும பீடம் மற்றும் காசாளர் கரும பீடத்தில் வாரத்தின் சகல அலுவலக நாட்களிலும் மு. ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை வரிக்கட்டண வரி செலுத்துவதற்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளது.
   I. மாவட்ட அலுவலகம் இல. 4 - ரொபர்ட் குணவர்தன மாவத்த, கிருலப்பன
9. கொமர்சல் வங்கியில் கணக்கு உள்ள வரி செலுத்துபவர்களுக்கு வலையமைப்பின் ஊடாக கொழும்பு மாநகர சபைக்கு வரிக்கட்டணவரி செலுத்தும் வசதிகள் காணப்படும்.

   காசோலை மூலம் வரிக்கட்டண வரி செலுத்தும்போது கீழ்க்காணும் விடயங்கள் பற்றி கவனம் எடுத்தல் வேண்டும்.
10. 'மாநகர பொருளாளர், கொழும்பு மாநகர சபை' பெயருக்கு காசோலை எழுதப்படல் வேண்டும். அத்துடன் 'கொடுக்கப்படுபவரின் கணக்கிற்கு மாத்திரம்' என்று எழுதப்படல் வேண்டும்.
11. சகவ காசோலைகளினதும் பின்பக்கம்
    (அ) வரிக்கட்டண கணக்கு இலக்கம்
    (ஆ) செலுத்துபவரின் பெயர் மற்றும் முகவரி
    (இ) சொத்து இலக்கம், வீதி, பிரிவு
    (ஈ) கொடுப்பனவு செலுத்தப்படுவது எந்த காலாண்டிற்கு என்பதுவும் குறிப்பிடப்படல் வேண்டும்.
12. காசோலைகள் மாறிய பின்னரே உத்தியோக பூர்வ பற்றுச் சீட்டு விநியோகிக்கப்படும்.

**வேறு விடயங்கள்**

13. தபால் மூலம் அனுப்பப்படும் காசோலைகள் வங்கி நிலையான கட்டளையின் கீழ் கொடுப்பனவுகள் மேற்படி இல. 1, 3 மற்றும் 4இல் குறிப்பிடப்படும் குறித்த தினம் அல்லது அதற்கு முன் இந்த அலுவலக த்திற்கு கிடைக்குமாறு மாநகர பொருளாளர், மாநகர பொருளாளர் திணைக்களம், கொழும்பு மாநகர சபை, த. பெ. 108, நகர மண்டபம், கொழும்பு 07 என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.
14. வரிக்கட்டண வரி பற்றிய தொடர்புகள்
    தொலைபேசி இல. 011 2693136, 011 4360847 (கணக்காளர் வரிக்கட்டணங்கள்)
    மின்னஞ்சல் acc02@colombo.mc.gov.lk/ acc07@colombo.mc.gov.lk
    இணையத்தளம்: www.colombo.mc.gov.lk

**சட்டத்தரணி ரோஷனீ திஸாநாயக்க,**
**மாநகர ஆணையாளர்,**
**கொழும்பு மாநகர சபை.**